சென்னை 5-9-2009

தினத்தந்தி




# இலவச மருத்துவ முகாம்

சென்னை, செப்.5– தென்னிந்திய தொழில் வர்த்தக சபை, போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சார்பில் அம்பத்தூர் தொழிற்பேட்டை சங்க மையத்தில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. தமிழக அரசின் 'சிட்கோ' இயக்குனர் டி.ராஜேந்திரன் தொடங்கி வைத்த இந்த முகாமில் தொழில் வர்த்தக சபை தலைவர் ஏ.வி.எம்.பாலசுப்ரமணியன், பொது சுகாதார இயக்குனர் டாக்டர் இளங்கோ, இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் தணிகாசலம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.